Civil Services (Main)
Examination- 2025

SLPM-D-TML

தமிழ் / TAMIL

தாள் II / Paper II

(இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : **மூன்று** மணி நேரம் *Time Allowed : **Three** Hours*	மொத்த மதிப்பெண்கள் : **250** *Maximum Marks : **250***

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடையெழுதும், முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்களை அருள்கூர்ந்து படிக்கவும் :

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் கோடு இடப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாகக் கோடு இடப்பட வேண்டும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions :

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

The number of marks carried by a question / part is indicated against it.

*Answers must be written in **TAMIL**.*

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Optional Province · optionalprovince.com

SECTION A

Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) உலகம் இருப்பதற்கான காரணங்களாகக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி சுட்டுவன யாவை ? *10*

(b) காமஞ்சேர் குளத்தாரின் தலைவி நெஞ்சு நோவதற்கான காரணமாகச் சுட்டுவனவற்றை எழுதுக. *10*

(c) கோவலன் அரசனின் பொற்கொல்லனை எதன்வழி அறிந்தான். *10*

(d) இலக்குவனின் போர்த்திறனைக் கும்பகர்ண்ன் எவ்வாறு புகழ்கிறான். *10*

(e) மாணிக்கவாசகர் "கடலிளுள் நாய் நக்கியாங்கு" என எதனை உவமிக்கிறார். *10*

Q2. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) போரில் இராமனுக்கும் கும்பகர்ணனுக்கும் நிகழ்ந்த உரையாடல்களை விவரிக்க. *20*

(b) பிசிராந்தையார் அறிவுடை நம்பிக்குச் செவியறிவுறுத்தும் கருத்துகளின் சிறப்பினை வெளிப்படுத்துக. *15*

(c) ஆண்டாள் கண்ணனை வர்ணிக்கும் முறைகளை விவரிக்க. *15*

Optional Province · optionalprovince.com

Q3. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) காலமும் இடமும் அறிந்து ஒரு செயலைச் செய்ய வேண்டியதன் தேவையைத் திருக்குறள்வழி விளக்குக. *20*

(b) அழற்படுகாதை காட்டும் மதுரையின் நிலையினை விளக்குக. *15*

(c) இறைவனின் பெருமைகளாக மாணிக்கவாசகர் சுட்டுவனவற்றை எழுதுக. *15*

Q4. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) உலைக்கல் அன்ன பாறை ஏறிக் கொடுவில் எயினர் பகழி மாய்க்கும். *15*

(b) சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை. *20*

(c) திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் அங்கணி ரண்டுங் கொண்டெங்கள் மேல் நோக்குதியேல். *15*

Optional Province · optionalprovince.com

SECTION B

Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) சேவகனால் ஏற்பட்ட சிரமங்களாகப் பாரதியார் குறிப்பிடுவனவற்றை எழுதுக. *10*

(b) குடும்ப விளக்கின் மையக்கதாபாத்திரம் எது ? ஏன் ? *10*

(c) ஆனந்தி அண்ணாமலைக்குக் கொடுத்த நூலில் இருந்தவை யாவை ? *10*

(d) தமிழ்நாட்டின் தாழ்ந்த நிலைகளாகச் சி.என். அண்ணாதுரை சுட்டுவன யாவை ? *10*

(e) வாலப்பகடை முத்துப்பட்டனுக்கு விதித்த நிபந்தனைகள் யாவை ? *10*

Q6. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) குடும்பவிளக்குத் தலைவி விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் முறைகளை விளக்குக. *20*

(b) யாருக்கும் வெட்கமில்லை நாடகத்தின் மொழிநடை குறித்து எழுதுக. *15*

(c) மலையருவியின் தாலாட்டுப் பாடல்கள் காட்டும் உறவுமுறைகள் குறித்து எழுதுக. *15*

Q7. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) காமராசன் சித்தரிக்கும் மதுவின் செயல்பாடுகளை எழுதுக. *15*

(b) ஜெயகாந்தனின் எழுத்துகள் "மனிதர்களின் நடவடிக்கைகளைக் கேலி செய்கின்றன" என்பதைக் குருபீடம் சிறுகதைத் தொகுப்பினைக் கொண்டு விளக்குக. *20*

(c) முத்துப்பட்டன் கதை காட்டும் சாதிய முரண்பாடுகளை எழுதுக. *15*

Optional Province · optionalprovince.com

Q8. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) அறத்தின் ஆட்சியாக மு.வ. குறிப்பிடுவனவற்றை எழுதுக. *15*

(b) ஓவியக் கலை குறித்து அகிலன் குறிப்பிடுவனவற்றை எழுதுக. *15*

(c) கும்மிப்பாடல் புலப்படுத்தும் மகளிர் உணர்வுகளை எழுதுக. *20*

Optional Province · optionalprovince.com